## ஜனவரி – 15 – செவ்வாய்

### புனித வனத்து சின்னப்பர்

**ஆண்டவரே, எங்கள் தலைவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது! திபா. 8:9**

### முதல் வாசகம் : எபிரேயர் 2 : 5 – 12

சகோதரர் நகோதரிகளே வரவிருக்கும் உலகு பற்றிப் பேசுகிறோம். கடவுள் அதனை வானதூதரின் அதிகாரத்திற்குப் பணியச் செய்யவில்லை. இதற்குச் சான்றாக மறைநூலில் ஓரிடத்தில் சொல்லப்பட்டுள்ளது இதுவே ”மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ஆயினும் நீர் அவர்களை வானதூதரை விடச்சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர் மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றுக்கு மேலாக அவர்களை நியமித்தீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர். ”அனைத்தையும் மனிதருக்கு அடிபணியச் செய்தார் என்பதால், எதையும் பணியாதிருக்க விட்டுவிடவில்லை எனலாம். எனினும், அனைத்தும் மனிதருக்கு இன்னும் அடிபணியக் காணோம். நாம் காண்பதோ சிறிது காலம் வானதூதரைவிடச் சற்றுத் தாழ்ந்தவராக்கப்பட்ட இயேசுவையே. இவர் துன்புற்று இறந்ததால், மாட்சியும் மாண்பும் இவருக்கு முடியாகச் சூட்டப்பட்டதைக் காண்கிறோம். இவ்வாறு கடவுளின் அருளால் அனைவருடைய நலனுக்காகவும் இவர் சாவுக்கு உட்பட வேண்டியிருந்தது. கடவுள் எல்லாவற்றையும் தமக்கென்று தாமே உண்டாக்கினார். அவர், மக்கள் பலரை மாட்சியில் பங்குகொள்ள அழைத்துச் செல்ல விரும்பியபோது, அவர்களது மீட்பைத் தொடங்கி வழிநடத்துபவரைத் துன்பங்கள் மூலம் நிறைவுள்ள வராக்கினார். இது ஏற்ற செயலே. தூய்மையாக்குகிறவர், தூய்மையாக்கப்படுவோர் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே. இதனால் இயேசு இவர்களைச் சகோதரர் சகோதரிகள் என்று அழைக்க வெட்கப்படவில்லை. ”உமது பெயரை என் சகோதரர் சகோதரிகளுக்கு அறிவிப்பேன் சபை நடுவே உம்மைப் புகழ்ந்து பாடுவேன்” என்று கூறியுள்ளார் அன்றோ!

**பதில்பாடல் :** உம் கை படைத்தவற்றை மனிதர் ஆளும்படி செய்துள்ளீர்

### நற்செய்தி : மாற்கு 1 : 21 - 28

இயேசுவும் சீடர்களும் கப்பர்நாகும் ஊரில் நுழைந்தார்கள். ஓய்வு நாள்களில் இயேசு தொழுகைக்கூடத்திற்குச் சென்று கற்பித்து வந்தார். அவருடைய போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத்தோடு அவர்களுக்குக் கற்பித்து வந்தார். அப்போது அவர்களுடைய தொழுகைக்கூடத்தில் தீய ஆவி பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த ஆவி, ”நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்னவேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்” என்று கத்தியது. ”வாயை மூடு இவரை விட்டு வெளியோ போ” என்று இயேசு அதனை அதட்டினார். அப்பொழுது அத்தீய ஆவி அம்மனிதருக்கு வலிப்பு உண்டாக்கிப் பெருங்கூச்சலிட்டு அவரை விட்டு வெளியேறிற்று. அவர்கள் அனைவரும் திகைப்புற்று, ”இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே! இவர் தீய ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார் அவையும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே!” என்று தங்களிடையே பேசிக் கொண்டனர்.
அவரைப் பற்றிய செய்தி உடனே கலிலேயாவின் சுற்றுப்புறமெங்கும் பரவியது.

**தியானம்:** இயேசுவின் பிரியமானவர்களே இன்றைய மாற்கு நற்செய்தியின் தொடக்கத்திலேயே இயேசுவுக்கும் தீயசக்திகளுக்கும் இடையே ஒரு பெரிய போராட்டம் நிகழ்வது குறிக்கப்படுகிறது. தீய ஆவியை இயேசு துரத்துகிறார். ஆனால் அந்த ஆவி இயேசு யார் என்பது குறித்துச் சான்றுபகர்கிறது. ““நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்““ (மாற்1:24) என்னும் சொற்கள் தீய ஆவியின் வாயிலிருந்து புறப்பட்டதாக மாற்கு எடுத்துரைக்கிறார். இயேசு கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்னும் உண்மையை இயேசுவின் சீடரே படிப்படியாகத்தான் அறிந்து கொண்டார்கள். ஆனால் தீய ஆவியோ இயேசு யார் என்பதை அறிக்கையிட முந்திக் கொள்கிறது. இவ்வாறு இயேசு பற்றிய தகவலைத் தீய ஆவி அறிக்கையிட்ட போது இயேசு அதைக் கடிந்துகொள்கிறார். ”வாயை மூடு““ என இயேசு கடுமையாகக் கூறுகிறார். இதிலிருந்து நாம் அறியும் முக்கிய கருத்து இயேசுபற்றிய நம்பிக்கை அறிக்கை மனிதரின் வாயிலிருந்து வெளி வரவேண்டும் என்பதாகும். தீய ஆவியின் அறிக்கை ஒரு தகவலாக இருக்கலாமே ஒழிய, கடவுளின் திட்டத்தை ஏற்றுப் பணிகின்ற பண்புதீய ஆவிக்கு இல்லை. மாறாக, மனிதரின் உள்ளத்தில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே இயேசுவின் பணிநோக்கம். மனிதர் உள்ளத்தில் மாற்றம் பெற்று, கடவுளின் வெளிப்பாட்டை ஏற்று, அவர் அனுப்பிய அவர்தம் மகனில் நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்நோக்கம் நிறை வேறும் போது இயேசுவின் பணிநம்மில் பயன் நல்குகிறது என நாம் கூறலாம். எனவே இன்றையதிருபலியின் வழியாக இறை இயேசுவின் நம்பிக்கையில் வாழ வரம் வேண்டி ஜெபிப்பேம்